தினத் தந்தி



# ஜிப்மர் கல்லூரி மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டி

## சுகாதாரத்துறை இயக்குனர் ஸ்ரீராமுலு பரிசு வழங்கினார்

புதுச்சேரி, மார்ச்.19-

ஜிப்மரில் கண் அழுத்த நோய் வாரத்தை தொடர்ந்து மாணவர்களுக்கான கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கில் மணக்குள விநாயகர் மருத்துவக்கல்லூரி, பிரிஸ்ட் பல்கலைக்கழகம், ஆறுபடை வீடு மருத்துவக்கல்லூரி, புதுவை பல்கலைக்கழக சமூக கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டனர். மேலும் ஜிப்மர் மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் வினாடி-வினா போட்டிகளும் நடத்தப்பட்டன.

தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் ஜிப்மர் கண் மருத்துவத் துறை தலைவர் டாக்டர் நிருபமா கஸ்தூரி வரவேற்றார். புதுவை சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் ஸ்ரீராமுலு கலந்துகொண்டு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் ஆபத்தில் உள்ளவர்களை பரிசோதிப்பதன் முக்கியத்துவத்தையும், நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கண் மருத்துவர்களின் பங்களிப்பையும் விளக்கினார்.

நிகழ்ச்சியில் பக்கப்பார்வை பரிசோதனை பற்றிய அறிவுறுத்தல் வீடியோவும், கண் அழுத்த நோய் பற்றிய நாடகமும், நோயறிதல் மற்றும் மேலாண்மை குறித்த விரிவுரைகளும் இடம்பெற்றன.